கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் **36/2024**

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 குமரேசன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 24.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதியின் தந்தை பெயர் என்ன என்றால் திருமலை ரெட்டியார் ஆகும். வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். வாதி நிலம் வாங்கியுள்ளார். நானும் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு முன்பே நான் வாங்கினேன். நானும், வாதியும் கிரையம் பெற்ற சொத்தின் புல எண்.448/3B2B என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் ஏக்கர் 0.15 ½ செண்ட் ஆகும். மேற்படி ஏக்கர் 0.15 ½ செண்ட் நிலமானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ரெங்கசாமி என்பவரின் தங்கைக்கு பாத்தியப்பட்டது. ரெங்கசாமியின் தங்கையிடமிருந்து எவ்வாறு ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் ரெங்கசாமியின் தங்கை இறந்துவிட்டதால் அவரின் வாரிசு என்பதின் அடிப்படையில் ரெங்கசாமிக்கு பாத்தியப்பட்டதாகும்.

2. நானும், வாதியும் தாவா சொத்து ரெங்கசாமிக்கு பாத்தியப்பபட்டதின் அடிப்படையில் தான் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். ரெங்கசாமி கடந்த 20.10.1990 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். ரெங்கசாமியின் மனைவி பெயர் ராஜாமணி என்றால் சரிதான். ரெங்கசாமி மற்றும் ராஜாமணிக்கு ரமேஷ், சசிகுமார், ஜவகர், குமரேசன் ஆகீய நான்கு மகன்கள் என்றால் சரிதான். மேற்படி நான்கு மகன்கள் பெயரில் தான் தாவா சொத்திற்கு கூட்டாக பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மேற்படி நான்கு நபர்களில் சசிகுமார், ஜவகர் இருவரும் சேர்ந்து அவர்களது பங்கை ரமேஷ்க்கு 10.07.2023 ம் தேதி கிரையமாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் என்ன நான்கெல்லை கண்டு எழுதியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கிரைய பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரனம் கண்டு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சுமார் 7 ¾ சென்ட் ஆகும். வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பதிவு செய்யும்போது நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் சாட்சியாக நானும், 2 ம் சாட்சியாக சுசேந்திரன் என்பவரும் சாட்சியாக வா.சா.ஆ.1 ல்

கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி சுசேந்திரன் என்பவர் கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரபூர்வமற்ற உதவியாளராக இருந்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி சுசேந்திரன் என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். மேற்படி சுசேந்திரனுக்கு ஊரில் எந்தெந்த சொத்துக்கள் விற்பனைக்கு வருகிறது என்றும், அதன் விஸ்திரனம் மற்றும் புல எண்கள் பற்றிய விவரங்கள் பொதுவாக தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் யார் மூலமாக ரமேஷ்யிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் நேரடியாக அவரிடமிருந்து கிரையம் பெற்றேன்.

4. சர்வே எண். 448/3B2B ல் மேற்படி ரமேஷ் கிரையம் பெறும் போது 4 ல் 1 பங்கு போக எங்கள் வீதம் 4 ல் 2 பங்கு என்று கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்யும் போது அதில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கு 4 ல் 2 பங்கிற்கு நான்கு எல்லை குறிப்பிட்டு எழுதவில்லை என்றால் சரிதான். மொத்த பங்கிற்கும் சேர்த்து தான் நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 சொத்து விவரத்தில் நான்கெல்லை என்று குறிப்பிடாமல் குறிப்பு என்று தனியாக நான்கெல்லை விவரங்கள் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குறிப்பு என்று கூறப்பட்ட இடத்தில் ஏக்கர் 0.15 ½ சென்டிற்குரிய நான்கெல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. ரமேஷ் என்பவரிடமிருந்து வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நான் கடந்த 12.07.2023 ல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 13.07.2023 ல் கிரையம் பெற்றேன். மேற்படி சொத்தை நான் கிரையம் பெறும் போது 4 ல் 3 பங்கு நிலத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சர்வே எண். 448/3B2B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சாஆ.,2 கிரைய ஆவணத்தின் படி 4 ல் 3 பங்கு சொத்திற்கு அடையாளம் கண்டு எழுதப்படவில்லை என்றால் நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தின் முதல் சாட்சி யார் என்றால் ரமேஷ் என்பவரின் மகன் கவின் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணத்தின் இரண்டாம் சாட்சி மேற்படி வா.சா.ஆ.1 ன் இரண்டாம் சாட்சியான அதே சுசேந்திரன் என்பவர் தான் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் படி தாவா சொத்துககள்

மேற்படி நான்கு நபர்களுக்கு பாகம் பிரிக்கப்படாத சொத்துக்கள் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 4ல் 3 பங்கு சொத்தை என்ன செய்துள்ளேன் என்றால் எனது தங்கையின் மகளான 2ம் பிரதிவாதி ரவினாவிற்கு கிரையமாக எழுதி ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன். மேற்படி கிரைய ஆவணம் தான் வா.சா.ஆ.3 ஆகிய கடந்த 30.11.2023ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3ன் படி எனக்கு பாத்தியப்பட்ட மொத்த நிலத்தை உட்பிரிவு செய்யப்பட்ட பின்பு எனது தங்கை மகளான 2ம் பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்படுத்திவிட்டேன் என்றால் சரிதான். எந்த தேதியில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து புல எண் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. பட்டாவை பார்த்தால் தான் தெரியும். புல எண்.3B2B2 என்று உட்பிரிவாகியுள்ளது.

7. நான் 2ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் கொடுப்பதற்கு முன்பு கடந்த 17.07.2023 அன்று வாதி மேற்சொன்ன நான்கு நபர்களில் ஒருவரான குமரேசன் என்பவரிடமிருந்து அவரது பங்கான 4ல் 1 பங்கு பாகத்தை கிரையம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எந்த பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. வாதியின் வழக்குரையை நான் படித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வழக்குரையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தேனா என்றால் பரிசீலனை செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தை தான் வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் சர்வே எண். 448/3B2Bன் மொத்த சொத்திற்கும் நான்கெல்லை கண்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. தாவா சொத்தின் மொத்த இடத்திற்கு கிழக்கே தென்வடல் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்பே தங்கவேல் வகையறாவின் இடமும், தெற்கே கலைசெல்வன் மற்றும் ஜெயக்குமார் (வாதி) என்பவரின் நிலமும், வடக்கே சதாசிவம் நிலமும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் தெற்கே உள்ள கலைசெல்வம் மற்றும் வாதியின் இடத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவை ஒரே சர்வே எண்ணிலிருந்து உட்பிரிவாகிவுள்ள நிலங்கள் ஆகும். வாதி கிரையம் பெற்ற 4ல் 1 பங்கு நிலமானது நான் கிரையம் பெற்ற 15 ½ சென்டிற்குள் தான் வருகிறது என்றால் சரிதான். மேற்படி நான்கெல்லைக்குள் தான் மேற்படி 15 ½ சென்ட் நிலம் அமைந்துள்ளது என்றால் சரிதான். நானும் வாதி ஒரே மாதம், ஒரே வருடத்தில் கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான்.

9. நானும், வாதியும் கிரையம் பெற்ற தேதிக்கு சுமார் நான்கு நாட்கள் மட்டுமே வித்தியாசம் என்றால் அது பற்றி தெரியாது. வாதி கிரையம் பெற்ற பின்பு தான் நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கியைரம் பெற்ற சமயத்தில் மேற்படி குமரேசனுக்கும் எனக்கும் பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை. தற்போது எனக்கும் வாதிக்கும் பாகப்பிரிவினையாகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. பத்திரம் ஏற்படுத்தினோமா என்றால் இல்லை. எந்த பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் பாகபத்திரத்தின் அடிப்படையில் எதுவும் உட்பிரிவு செய்யபடவில்லை. கிரைய ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது.

10. எந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு ரமேஷ் கிரையம் செய்த வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது. நான் பெற்ற கிரைய ஆவணத்தில் நான்கெல்லை குறிப்பிடாத நிலையில் எவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நில அளவையரை தான் கேட்க வேண்டும். நானும் அதே ஊர்க்காரர் என்பதால் மேற்படி விவரங்களும், ரமேஷ் என்பவரின் உரிமை மூலமும் எனக்கு நன்கு தெரியும். மேற்படி சொத்தை உட்பிரிவு செய்ய வருவாய் துறையினருக்கு யார் மனு செய்தது என்றால் ரமேஷ் தான் எனக்கு கிரையம் செய்வதற்கு முன்பே மனு கொடுத்தார். நான் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தில் நான்கெல்லை மற்றும் மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

11. மூல பத்திரத்தில் நான்கெல்லை உள்ளது. மூல பத்திரத்தில் 15 ½ சென்ட் நிலத்திற்கு தான் நான்கு எல்லை உள்ளது என்றால் சரிதான். நில அளவையர் நிலத்தை பார்வையிட்டாரா என்றால் பார்யிட்டு சென்றதாக எனக்கு சொன்னார்கள். நில அளவையரை யார் மனு செய்து அழைத்து வந்தார் என்றும், எதன் அடிப்படையில் நிலம் அளவீடு செய்யப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த போது உட்பிரிவு செய்யப்பட்ட புல எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண். 448/3B2B2 என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ.3 ஆவணத்தின் பின்னிணைப்பில் சர்வே எண். 448/3B2B2 ற்கான பட்டாவையும் இணைத்து கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. உட்பிரிவு செய்யப்பட்ட பின்பு நிலபுல வரைபடத்தில் எனக்கு உட்பிரிவு செய்யப்பட்ட நிலத்தை வருவாய் துறையினர் என்னிடம் குறிப்பிட்டு காண்பித்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த தேதி 30.11.2023 என்றால் சரிதான். என்னிடம் வா.சா.ஆ.5 நிலபுல வரைபடத்தில் 05.12.2023 என்று தேதி உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–5 வரைபடமானது மேற்படி தேதியில் கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வரைபடத்தில் சர்வே எண். 448/3B2B2 நிலமானது எங்குள்ளது என்றால் மேற்படி நிலம் அதில் இல்லை. சர்வே எண். 448/3B2 நிலமே வா.சா.ஆ–5ல் இல்லை. எனக்கு ரமேஷ் கிரையம் செய்த நிலமானது சர்வே எண். 448/3B2 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 448/3B2B நிலமானது வா.சா.ஆ.5ல் உள்ளதா என்றால் இல்லை. நான் கிரையம் செய்த தேதியில் சர்வே எண். 448/3B2B நிலமே இல்லை என்றால் சரியல்ல.

13. இல்லாத நிலத்தை நான் கிரையம் பெற்று, 2ம் பிரதிவாதிக்கும் கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிராம வருவாய் ஆவணங்களில் மேற்படி நிலத்தை பொறுத்த பதிவுகள் உள்ளது. மேற்படி பதிவுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இவ்வழக்கு மூலமே எனது செல்வாக்கு மூலம் மேற்படி பதிவுகளை திருத்தியதால் தான் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கு உடந்தையாக மேற்சொன்ன சுசேந்திரன் இருந்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சுசேந்திரன் என்பவர் தான் கிராம நிர்வாக அலுவலரின் கீழ் மேற்படி பதிவுகளை கையாண்டு வந்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தவறாக உட்பிரிவு செய்யப்பட்டதாக கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

14. வாதி எந்த சொத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. அவர் எந்த சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண். 448/3B2B ஆகும். மேற்படி நிலத்தின் கூட்டுபட்டாவில் வாதியும் உள்ளார் என்றால் சரிதான். நான், சர்வேயர், கிராம நிர்வாக அலுவலரும் சேர்ந்து உட்பிரிவு செய்யும் போது எதன் அடிப்படையில் வாதிக்கு அவரது நிலத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் ரமேஷ் என்பவரின் உரிமை மூலத்தின் அடிப்படையில் மேற்படி நிலங்களுக்கு உட்பிரிவு செய்யப்பட்டது. தாவா சொத்தில் கிணறு

உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ–5ல் புல வரைபடத்தில் கிணறு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5ல் வட்டமாக உள்ள குறிப்பு என்ன என்றால் அது பற்றி தெரியாது. பொதுவாக பாகபிரிவினை செய்யும் போது போர்வெல் வசதி, தண்ணீர் வசதி பொதுவாக வைக்கப்பட்டுதான் பாகம் பிரிப்பார்கள் என்றால் சரிதான்.

15. ரெங்கசாமியின் மொத்த சொத்திற்கும் கிழக்கே தான் ரோடு உள்ளது என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி ரவீனாவிற்கு எழுதி கொடுத்த சொத்தில் நான் குறிப்பிட்டு 4ல் 3ல் பங்கு நிலத்திற்கு நான்கெல்லை விவரங்கள் கண்டு எழுதி கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் செய்துள்ளேன். நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த போது ரோடு வசதி அவர் அடைந்து கொள்ளும்படி கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தின் கிரைய ஆவணத்தின் படி நான் கிரையம் செய்து கொடுத்தேன். உட்பிரிவுவின் படி வாதிக்குக்கு மேற்படி 15 ½ சென்ட் நிலத்திற்கு பாதை வசதி உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்து குடியிருப்பு நிலமா என்றால் இல்லை. விவசாய நிலமாகும். தற்போது விவசாயம் நடைபெறுகிறதா என்றால் இல்லை. வாதிக்கு உட்பிரிவு செய்யப்பட்ட நிலத்தின் அளவு தெரியுமா என்றால் தென்வடல் 72 அடி ஆகும்.

16. கிழமேல் எனக்கு தெரியாது. நான் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்பு மேற்படி சொத்தை அவருடைய சுவாதீனத்தில் கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். எனவே தாவா சொத்தை பொறுத்து எனக்கு எந்தவிதமான உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய போகிறோமா என்றால் தேவைப்பட்டால் விசாரணை செய்வோம். ஆனால் 2ம் பிரதிவாதி மேற்படி சொத்தை மேற்சொன்ன ரமேஷ் என்பவரின் மனைவி ராதிகாவிற்கு கிரையம் செய்துவிட்டு தற்போது திருமணமாகி லண்டன் மகாணத்தில் வசித்து வருகிறார். ராதிகாவின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது.

17. நான் சொன்னதின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 11.03.2025ல் மேற்படி ராதிகாவிற்கு வா.சா.ஆ–10 கிரைய பத்திரத்தின் வாயிலாக கிரையம் செய்து கொடுத்துளளார்கள் என்றால் சரிதான். தேதி சரியாக நியாபகம்இல்லை. மேற்படி ராதிகாவிற்கு கிரையம் செய்த போது இவ்வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 2ம் பிரதிவாதியின்

பெயரில் தான் சொத்து இருந்து என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த கொடுத்த பின்பு மேற்படி சொத்தில் அவர் கட்டிடங்கள் எழுப்பினரா என்றால் இல்லை. மேற்படி கிரையத்திற்கு முன்பே அதில் மெட்டல் செட் இருந்தது. மேற்படி மெட்டல் செட் இருந்தது பற்றி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி நிலம் விவசாய நிலம் என்பதால் அதில் கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது.

18. மேற்படி செட்டிற்கு மின் இணைப்பு , வரி, வாய்தா ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி 15 ½ சென்டிற்கு கிழக்கே உள்ள தென்வடல் ரோட்டிலிருந்து மேற்படி நிலத்திற்குள் வாதி வந்து செல்வதை நான் தடை செய்தேனா என்றால் எனக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு வாதி வந்ததால் தடை செய்தேன். எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால் கிழமேல் 72 அடி ஆகும். தென்வடல் அளவுகள் தெரியாது. எனது இடத்தை சுற்றி சுற்றுச்சுவர் எதுவும் எழுப்பியுள்ளேனா என்றால் வடபுறத்தில் முள் வேலி அமைத்திருந்தேன். கீழ்புறம் எதுவும் அமைக்கவில்லை என்றால் சரிதான். ரோடு தான் உள்ளது. தொடர்ந்து ஒரே மாதத்தில் மூன்று பத்திரங்களை ஏற்படுத்தி வஞ்சக கூட்டாக தயார் செய்துள்ளதால் இவ்வழக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

19. ரெங்கசாமியிடமிருந்து வாதி கிரையம் பெற்ற விவரம் தெரிந்து காழ்புணர்ச்சி காரணமாக எவ்வித பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில் எனது செல்வாக்கை பயன்படுத்தி வருவாய் துறையில் தவறுதலாக உட்பிரிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 15 ½ சென்ட் நிலத்தை பொறுத்து வாதி கூட்டு பங்குதாரர் என்பதால் அவருக்கு எதிராக செய்யப்பட்ட மேற்படி உட்பிரிவானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 15 ½ சென்ட் நான் கிரையம் பெற்ற சொத்து அடையாளம் காண முடியாத சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்த வரை வாதி கூட்டு பங்குதாரர் என்பதால் அவரை நான் தடை செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனது இடத்திற்குள் அத்து மீறி நுழைந்தால் தடை செய்வேன்.

20. தாவா சொத்தின் அடையாளத்தை நான் மாற்ற முயற்சித்ததால் இவ்வழக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அடையாளம் கண்டு அறுதியிடாமல் அதன் தன்மை மற்றும் உட்பிரிவை மாற்றம் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய தனிப்பட்டா எனது செல்வாக்கை பயன்படுத்தி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் வருவாய் துறை ஆவணங்கள் திருத்தப்பட்டது

என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக் இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**